செ.வெ.எண்: 252 21/5/09

பத்திரிக்கை செய்தி

செய்தி மக்கள் தொடர்புத் துறை

**எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம், சென்னை -113 மூன்று ஆண்டு கால பட்டயப் படிப்புகளுக்கான 2009–2010 ஆகிய ஆண்டுக்கான மாணவர் சேர்க்கை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர், திரு சி.காமராஜ், இ.ஆ.ப. அவர்கள் தகவல்:

தமிழக அரசால் நடத்தப்பட்டு வரும் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் திரைப்பட தயாரிப்பு தொழில் நுட்பத்துடன் தொலைக்காட்சித் தயாரிப்பு நுணுக்கத்தையும் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றது. இந்நிறுவனம் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கீழ் இயங்கி வருகிறது.

இந்நிறுவனத்தில் கீழ்க்கண்ட 5 பட்டய படிப்புகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது.

திரைப்பட தொழில்நுட்பம் மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பு பட்டயம் (ஒளிப்பதிவு)

திரைப்பட தொழில்நுட்பம் மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பு பட்டயம் (படப் பதனிடுதல்)

திரைப்பட தொழில்நுட்பம் மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பு பட்டயம் (ஒலிப்பதிவு மற்றும் ஒலிப்பொறியியல்)

இயக்குதல், திரைக்கதை வசனம் எழுதுதல் மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பு பட்டயம்

படத் தொகுப்பு மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பு பட்டயம்

மேற்கண்ட மூன்றாண்டு கால பட்டயப் படிப்புகளில் துணைப் பாடமாக தொலைக்காட்சித் தயாரிப்பு தொழில்நுட்பங்களையும் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது.

இந்நிறுவனத்தில் 2009-2010ஆம் கல்வியாண்டுக்கான மேற்கண்ட ஐந்து பட்டயப் படிப்புகளுக்கான மாணவ / மாணவியர்கள் சேர்க்கை தொடர்பான விளம்பரம் "THE HINDU" மற்றும் "தினத்தந்தி" ஆகிய நாளிதழ்களில் 14.5.09 அன்று விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தில் சேர விண்ணப்பப்படிவம் மற்றும் விவரக் குறிப்பேடுகள் பெற விரும்பும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவ / மாணவியர்கள் தங்களது சாதி சான்றின் செராக்ஸ் நகலுடன் " THE DIRECTOR, INFORMATION AND PUBLIC RELATIONS DEPARTMENT, MGR GOVERNMENT FILM & TELEVISION INSTITUTE, THARAMANI , CHENNAI-113" எனும் பெயரில் சென்னையில் மாற்றத் தக்க வகையில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் ரூ.30/-க்கான வங்கி வரைவோலையுடன் சுய விலாசமிட்ட ரூ.10/-க்கான அஞ்சல் வில்லை ஒட்டிய உறையுடன் அனுப்பி விண்ணப்ப படிவம் பெற்றுக் கொள்ளலாம்.

இதர பிரிவினர், " THE DIRECTOR, INFORMATION AND PUBLIC RELATIONS DEPARTMENT, MGR GOVERNMENT FILM & TELEVISION INSTITUTE, THARAMANI , CHENNAI-113" எனும் பெயரில் சென்னையில் மாற்றத் தக்க வகையில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் ரூ.100/-க்கான வங்கி வரைவோலை பெற்று சுய விலாசமிட்ட ரூ.10/-க்கான அஞ்சல் வில்லை ஒட்டிய உறையுடன் " THE DIRECTOR, INFORMATION AND PUBLIC RELATIONS DEPARTMENT, MGR GOVERNMENT FILM & TELEVISION INSTITUTE, THARAMANI , CHENNAI-113" எனும் முகவரிக்கு அனுப்பியும் அல்லது நேரிலும் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவம் விற்பனை மற்றும் பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் திரும்ப பெறுவதற்கான கடைசி நாள் 01.06.2009 மாலை 5.00 மணி,

இது குறித்த விவரம் www.tn.gov.in எனும் இணைய தளத்திலும் காணலாம். இத் தகவலை செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர், திரு சி. காமராஜ், இ.ஆ.ப. அவர்கள் தெரிவிக்கிறார்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை -9

இயக்குநர்,
செய்தி மக்கள் தொடர்பு.

21/5

21.5.09

2/2